RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s177

# சண்டேசுர நாயனாரின் வழிபாட்டுமுறை

**சி. அருணா** [அ, *]

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), (பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைவுபெற்றது), சேலம்-636016, தமிழ்நாடு, இந்தியா

# Worship of Chandesura Nayanar

**S. Aruna** [a, *]

[a] PG and Research Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), (Affiliated to Periyar University), Salem-636016, Tamil Nadu, India

* Corresponding Author: aruna.s2585@gmail.com

Received: 17-03-2022
Revised: 29-10-2022
Accepted: 17-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Although human society is divided due to various reasons, it is only in God that all are united. We know that God is always present in the hearts of those who have peace of mind and purity of mind. Some devotees are submissive to the Lord in love and affection. There are some other devotees of God who are endowed with love and morality and punish those who disturb their devotees with anger and express their devotion to The Lord. Similarly, in Periyapuranam, Chandesura Nayanar punished his father for causing harm to the Lord. In appreciation of that the Lord blessed him with final emancipation and made the world aware of the glories of Chandesura Nayanar. The characteristic of this article is to highlight the methods of worship Nayanars followed.

**Keywords:** Chandesura Nayanar, Worship, Affection, Morality

## முன்னுரை

பண்டைய கால மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்வு நடத்தினான், இயற்கையின் கோபத்தால் பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான். விழா எடுத்து நன்றிக்கடன் செய்ய விரும்பினான். மக்கள் சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை இயற்கையை வழிபடுவதைக் காணலாம். கதிரவனின் பேரொளியையும், காற்றின் சீற்றத்தையும், மழையின் மொழியையும், இருளின் மறைப்பையும் கண்டு அஞ்சி வழிபடத் தொடங்கினான். மக்கள் இயற்கையில் கண்ட பெருநிகழ்வுகளை உள்ளத்தில் கொண்டு, பயத்தினால் வழிபடத் தொடங்கியது நாம் அறிந்த ஒன்றாகும். பெரியபுராணத்தில் இறைவனிடம் கொண்டுள்ள பக்தியின் விளைவில் சைவ அடியாரின் வழிபாட்டினைக் கண்டு இறைவனே அடியாரைக் காணச் சென்று அவரை மீட்டுக் கொண்டார். அவரே சண்டேசுர நாயனார் எனும் சைவ அடியாரின் வழிபாட்டு முறையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாட்டு முறைகள்

மனிதன் முதல் முதலில் இயற்கையை வழிபட்டான். பிறகு உயிருள்ளவைகளையோ, உயிரற்றவைகளையோ, இயற்கையானவைகளையோ, செயற்கையானவைகளையோ ஏதோ ஒரு பொருளின் மீது உள்ள ஆற்றல் வழிபடச் செய்கின்றதை அறியலாம். முன்னோர் வழிபாட்டை தமிழகமெங்கும் காணலாம். தமிழரிடையே நடுகல் வழிபாடும் இருந்தது. பின் உருவ அமைப்பு

கோயில் அமைப்பு உருவாக்கிக் கொண்டு வழிபட்டனர் என்பதை பக்தி இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மேலும் திருமூலர்,

"அன்பே சிவம் இரண்டு என்பார் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்ற திருமந்திரத்தில் அன்பே சிவம் என்ற மந்திரத்தை ஓதுகின்றார் (Manikkavasagan, 2016). சிவம் என்பதற்கு வீரம் என்றும் பொருள்படும். நாயன்மார்களில் பலர் உள்ளம் உருகி பக்தியாலும், சிலர் சிவ வழிபாடு செய்யும்அடியார்களுக்கு இடையூறு செய்பவர்கள் மீது கோபம் கொள்ளவும் என்றுமே தயங்கியதில்லை. அடியார்களுக்கு அரசு, ஆட்சி, அதிகாரம் பற்றி பயம் கிடையாது. சிவபக்தி மட்டுமே பெரிதாகக் தோன்றியது. சிவனை நிந்திப்பவர்களைக் கடுமையாகத் தண்டித்தனர். இவர்களின் வீரம் கண்ட சிவன் வீடுபேறு அளித்து மகிழ்ந்தார் (Madhan Kumar, 2020).

"நிதிதரு கவிகையும் நிலமகள்

உரிமையும் இவை இவை உடைநந்தி"

என்று நந்திக்கலம்பகத்தில் வீரர்களின் பெருமையை உணர்த்தும் வகையில் மலர் போன்ற பாதங்களைப் பணிந்து வணங்காதவர் வானுலகை அடைவர் என்று எடுத்துரைக்கின்றது (Kathir Murugu, 2007). அவ்வாறு சண்டேசுர நாயனார் என்ற பெயருடைய விசாரசர்மன் என்பவருடைய வழிபாட்டு முறையைக் கண்டால் மனம் மெய்சிலிர்க்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

## விசாரசர்மன் வரலாறு

சோழ நாட்டில் மண்ணியாற்றங்கரையில் திருசேய்ந்நலூர் (சேந்தனூர்) என்ற ஊரில் எச்சதத்தன் பவித்திரை எனும் தம்பதியருக்கு மகனாக ஆண்குழந்தை பிறந்தது. எச்சதத்தன் தன்குழந்தைக்கு விசாரசர்மன் எனப் பெயரிட்டார். பூர்வ ஜன்ம புண்ணியத்தால் விசாரசர்மன் ஐந்து வயதிலேயே வேதங்களையும், சிவாகமங்களையும் தானே உணர்ந்து விளங்கினான் என்பதை,

"நிகழும் முறைமை ஆண்டேழும் நிரப்பும் பருவம் - வந்தெய்தப்

புகழும் பெருமை உபநயனப் பொருபில் சடங்கு - முடித்தறிவின்

இகழு நெறிய அல்லாத எல்லாம் இயைந்த எனினும்தம்

திகழ மரபின் ஓதுவிக்கும் செய்கை பயந்தார் செய்வித்தார்"

என்று சேக்கிழார் விசாரசர்மனின் ஏழாவது வயதில் எச்சதத்தன் உபநயனம் செய்து வைத்தார் (Gnanasambandan, 2010). அவர் கற்பதற்குப் புதிதாக ஏதும் இல்லை. அவரது திறமையைக் கண்டு ஆசிரியர்கள் வியந்தனர். விசாரர்மனின் கற்கும் ஆவலை,

"தாமின் புறுவது உலகின் புறக்கண்

காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற குறளின் வழி தன் மனத்தை மகிழ்விக்கும் கல்வியினால் உலகம் மகிழ்வதைக் கண்டு கற்று அறிந்தவர்கள் மேலும் பலவற்றைக் கற்கவே விரும்புவார்கள் என்று வள்ளுவர் எடுத்துரைப்பது விசாரசர்மனுக்கு பொருந்துவதாக அமைந்துள்ளது (Subramaniyan, 2012).

## விசாரசர்மனின் அன்பு நிலை

விசாரசர்மன் அனைத்து ஆகமங்களையும் உணர்ந்த விசாரசர்மன் சிவபெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டான். எந்நேரமும் இறைவனின் திருவடியைச் சிந்தித்தான். பூசைகள் செய்து சேவித்து வணங்கினான். ஒரு நாள் மற்ற சிறுவர்களுடன் பாடசாலைக்கு செல்லும்போது, மாடு மேய்க்கும் சிறுவனை ஒரு கன்று முட்ட வந்தது. அவன் தன் கையில் வைத்திருந்த தடியால் அந்த கன்றை இரக்கமில்லாமல் அடித்துவிட்டான். அதனைக் கண்ட விசாரசர்மன் விரைந்து சென்று அச்சிறுவனின் கையில் வைத்து இருந்த தடியை பிடுங்கி எறிந்தான். மேலும்,

“யாவுந் தெளிந்த பொருள் நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்

ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற்கருள் செய்வாள்”

என்ற பாடலின் வழி பசுக்கள் காமதேனுவின் அம்சம் அல்லவா? அதன் உடலில் முப்பது முக்கோடி தேவர்கள் இருக்கிறார்கள் (Gnanasambandan, 2010). எத்தனையோ புண்ணியத்தீர்த்தங்கள் அதன் உடம்பில் இருக்கின்றன. காளை சிவனுக்கு வாகனமாக அமைந்துள்ளது. மாடுகளிடமிருந்து கிடைக்கும் சாணமே இறைவனுக்கு பிரியமான திருநீறு ஆகின்றது. பசுவின் மூத்திரம், சாணம், புனிதத் தன்மை வாய்ந்ததாகும். பசுவைப் பூசிக்க வேண்டும்; இப்படி அடிக்கக் கூடாது என்று கடிந்துரைந்தான். இச்செய்தியினை அனைவருக்கும் கூறினான். தானே மாடுகன்றுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருவதாகக் கூறினான். வாயில்லாத உயிர்களுக்கும் கூட அன்பைச் செலுத்தும் செயலை அறிவர் வள்ளுவர்,

“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்; ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்”

என்ற அன்புடைமை குறள்மூலம் உள்ளத்தில் இருக்கும் அன்பை தாழ்ப்பாள் போட்டு அமைத்து வைக்க முடியாது அன்புக்குரியவரின் துன்பங்களை காணும்போதே கண்ணீர்த்துளி தானாக வெளிப்பட்டுவிடும் என்பது போல விசாரசர்மன் அன்பு உள்ளம் கொண்டவனாக பசுக்கன்றுகளிடம் அன்பைப் பொழிகின்றான். அவனுடைய வளர்ப்பில் கன்றுகள் செழிப்போடு அதிக பாலைக் கொடுத்தன (Subramaniyan, 2012).

“பொங்கும் அன்பால் மண்ணிமணற் புளினக்குறையில் ஆத்தியின்கீழ்ச்

செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்

துங்கநீடு கோபுரமும் சுற்றா வயமும் வகுத்தமைத்தார்”

என்ற கருத்தின் மூலம் மண்ணியாற்றங்கரையில் ஓரத்தில் அத்திமரத்தின் கீழ் மண்ணைக் கொண்டு அழகிய சிவலிங்கம் அமைத்தான். அங்கே அமர்ந்து தினமும் தியானம் செய்து வந்தான். புதிய பானைகளை வாங்கி வந்து பசுக்கள் தாமே சொரியும் பாலை ஏந்தியும், மலர்மாலை சூட்டியும், அர்ச்சனை செய்தும், தூபதீப நைவேத்தியங்களை உளமாற வேண்டியும் பூசை செய்து முடித்தான். உள்ளம் ஆனந்த பெருமகிழ்ச்சி அடைந்தான். அவன் செய்ததை இறைவன் உளமாற ஏற்றுக் கொண்டு மனம் குளிர்ந்தார் (Gnanasambandan, 2010).

“ஆலயப் பணியே ஆண்டவன் பணி”

எனும் பண்பை விசாரசர்மன் மேற்கொண்டு பூசை செய்து இறைவனின் அருளைப் பெற்றான் (Backiamary, 2014).

## விசாரசர்மனின் பக்திநிலை

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பர். திருநீறு இல்லாத நெற்றி பாழ் என்ற எண்ணம் கொண்ட விசாரசர்மன் தினமும் பூசித்து உள்ளம் குளிர்ந்தான். இதனைக் கண்ட மக்கள்

அவனது தந்தையிடம் இந்நிகழ்வுகளைத் தெரிவித்தனர். அதனைக் கேட்ட தந்தை இனி அவ்வாறு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கிறேன் என்று மக்களுக்கு சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தார். பின்னர் மாடுகளை ஓட்டி சென்ற மகனைப் பின் தொடர்ந்தார். விசாரசர்மன் வழக்கம் போல தன் பூசையைத் தொடங்கி தியானத்தில் மூழ்கினான். எச்சதத்தன் மகனை முதுகில் அடித்தார். தியானத்திலிருந்தால் எதுவும் அவனுக்குத் தெரியவில்லை. தந்தையின் கோபம் அதிகரித்தது. கோபம் கொள்ளக்கூடாது என்பதை அறிய தந்தையின் செயலை வலியுறுத்த,

"ஆறுவது சினம்"

என்று ஔவையார் தனது ஆத்திசூடியில் தனிமனிதனை நிலைகுலையச் செய்வதில் சினம் தலைமை இடத்தைப் பெறுகிறது (Avvaiyar, 2016). எனவே ஒருவன் சினத்தை அடக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். விசாரசர்மனின் தியான நிலையை உணர்த்த நாலடியார்,

"ஊக்கித் தாம்கொண்ட விரதங்கள் உள்உடைய

தாக்க அருந்துன்பங்கள் தாம். தலை வந்தக்கால்

நீக்கி நிறூஉம் உரவோரே, நல்ஒழுக்கம்

காக்கும் திருவத்தவர்"

என்ற பாடலின் வழி முயற்சியுடன் தான் மேற்கொண்ட விரதங்கள் உள்ளம் சிதையுமாறு தடுக்க முடியாத துன்பங்கள் வந்தபோதும் எப்படியாவது அத்துன்பங்களை விளக்கி விரதங்களை நிலைநிறுத்தி மனவலிமையுடன் ஒழுக்கத்தைச் சிறப்படையச் செய்யவேண்டும் என வெளிப்படுத்துகின்றது (Subramaniyan, 2012). ஆகையால் விசாரசர்மனின் தியானம் மாறாமலும், தந்தையின் கோபமும் விடுத்து இறைவனுக்குத் தொண்டு செய்வதே அறப்பணியாகும்.

## தந்தையைக் கண்டித்த நாயனார்

விசாரசர்மன் மனம் பூசையில் ஈடுபட்டிருந்ததால் நடந்தது எதுவும் தெரியவில்லை. தந்தையின் கோபம் அதிகரிக்கவே குடங்களில் இருந்த பாலைக் காலால் உதைத்துத் தள்ளினார். அப்போது விசாரசர்மனுக்கு உணர்வு தெரிந்தது.

"முந்தை மருங்குகிடந்த கோல் எடுத்தார்க்கதுவே முறைமையினால்

வந்து மழுவா யிடஎறிந்தார்; மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்"

என்ற பெரியபுராண பாடலின் வழி எம்பெருமானுக்குத் தீங்கிளைத்தவர் தந்தை என்றும் பாராமால் கீழே இருந்த தடியை எடுத்தான் அது மழுவாக மாறி கொஞ்சமும் யோசிக்காமல் அவருடைய இருகால்களையும் துண்டித்தான். அவர் கீழே விழுந்து அலறினார் (Gnanasambandan, 2010). இறைவனுக்குத் துன்பம் அளித்தது போல வாயில்லாத ஜீவனுக்காக,

"........ பார்மேல்

மருளும் பசுவொன்றின் மம்மர் நோய் தீர

வருளுத் திருத்தே ரூர்வோன்"

என்ற பாடலின்வழி உலக மக்கள் மயக்கம் கொள்ளுமாறு பசுவின் மனக்கலக்கத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தன் மகன்மேல் தேர் ஏற்றிய மனுநீதிச்சோழன் போல விசாரசர்மன் சிவனுக்குத் துன்பம் நேர்ந்ததை உணர்த்த விசாரசர்மன் இவ்வாறு வலியுறுத்தினான். வானம் அதிர்ந்தது எம்பெருமான் உமையோடு தோன்றி, எனக்கு அபச்சாரம் செய்த காரணத்திற்காக தந்தை என்றும்பாராமால் தண்டித்தால் இனி நாமே உனக்கு தந்தையாவோம் என்று அருளி அவனை அணைத்துக் கொண்டார் (Kathir murugu, 2007). மேலும்,

"அண்டர் பிரானுந் தொண்டர் தமக் கதிபானாக்கி அனைத்து நாம்

உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்

சண்டிசனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற்றடமுடிக்குத்

துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்"

எனும் பாடலின் வழி விசாரசர்மன் இறைவன் அருளிய அருளால் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தான் (Gnanasambandan, 2010). சிவகணங்கள் போற்றிக் கொண்டாட சண்டேசுர பதவியை அடைந்தார். இறைவனை வணங்குவதற்காகவே வேறு எந்த நலனும் தேவை இல்லை என்னும் பக்தி வீரம் உடையவராக அடியார்கள் விளங்கும் சிறப்பினை,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

கூடும் அன்பினில் கும்பிட லேஅன்று

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

இறைவனை வணங்குவதும் இறைவனின் அருளால் வீடுபேறு அடைவதும் பாங்குற பகருகின்றன. இறைவனை அடைய அன்பு ஒன்றே போதுமானதாகும் (Backiamary, 2014).

## விசாரசர்மனின் சிறப்பு

சிவாலயங்களில் சாமிக்கு இடது புறத்தில் சிறிய சன்னதி ஒன்று உள்ளது. சாமியை தரிசித்துவிட்டு வரும் அடியார்கள் வந்து கைகொட்டி வணங்கி செல்வார்கள் சிவன் கோயிலில் சொத்துக்கள் சண்டேசுரரின் பொறுப்பில் உள்ளது என்றும், தாங்கள் செல்லும்போது சிவன் சொத்து எதையும் எடுத்து செல்லவில்லை என்றும் அறிவிப்பதற்காக கைகளைத் தட்டிவிட்டு செல்வதாகக் கூறுவர். சண்டேசுர நாயனாரின் குரு பூசை தை மாதம் உத்திரம் நட்சத்திரத்தில் இன்றளவும் கொண்டாடப்படுகின்றது.

## முடிவுரை

உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்க உணர முற்படமேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு என்பர். இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடாகும். உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காக திறந்து வைப்பதே வழிபாடு என்றும் கூறுவர். வழிபாட்டின் மூலம் எவ்விதத் துன்பம் அடைந்தாலும் வலிமையுடன் இறைவன் அன்பான அடியார்களைப் பாதுகாத்து வீடுபேறு அடைய அருள் புரிவார். அடியார்களின் பக்தியும், வீரமும் ஒரே சீரான பாதையில் இறைவனை வந்தடையச் செய்கின்றது. இறைவன் மீது கொண்ட தீராத அன்பால் சற்றும் யோசிக்காமல் சிவனுக்குத் துன்பம் அளித்ததைக் கண்டு தனது தந்தை என்றும் பாராமல் தண்டித்த சண்டேசுர நாயனாரின் புகழை உலகறியச் செய்யவே இறைவன் அருளிய செயல் என்பதை அனைவரும் காணலாம்.

## References

Avvaiyar, (2016) Aathichudi Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Backiamary, F. (2014) Vagamai Nokkil Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India.

Gnanasambandan, A.S. (2010) Periya Puranam oor aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Kathir Murugu, (2007) Kuloththunga cholan ula moolamum uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Madhan Kumar, R. (2020) Thavayogam and sivayogam in Thirumanthiram, International Research Journal of Tamil, 3(1), 13-23. https://doi.org/10.34256/irjt2112

Manikkavasagan, G. (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Subramaniyan, Sa.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License